8002/2022 No.L-0440 4865/21 2258/4

Govt. District Head Quarters H... 02 APR 2022 Dharmapuri

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-6, அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),

ந.க.எண்.48523/நிபி8/1/2021 நாள்: 06.01.2022

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து காணாமல் போனதாக நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்ட திரு.நாகராஜன் என்பவரின் மகன் திரு.என்.சுரேஷ் – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

மருத்துவம் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்பநல... 19 JAN 2022 தருமபுரி

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 17.07.1998.
2. தருமபுரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண்.109/2006. நீதிபதி தீர்ப்பாணை நாள் 29.10.2004.
3. அரசு கடித எண்.4525/ஏடி2/2009-3, மக்கள் நல்வாழ்வுத் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23.07.2009.
4. இவ்வியக்கக கடித ந.க.எண்.95889/நிபி8/1/2006, நாள் 12.09.2009.
5. அரசு கடித எண்.41841/ஏடி2/2009-4, மக்கள் நல்வாழ்வுத் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23.12.2010.
6. அரசு கடித எண்.971/ஏடி2/2012-2, மக்கள் நல்வாழ்வுத் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 28.03.2012.
7. இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.95889/நிபி8/1/2006, நாள் 04.10.2019.
8. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.61476/நி2/2/2019, நாள் 22.10.2019.
9. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
10. அரசு கடித எண்.8755/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 16.03.2021.
11. தருமபுரி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.4865/நி1/2021, நாள் 10.08.2021.

------

| JDHS DHARMAPURI |
|---|
| JDHS - |
| AO - |
| OS (E)- |
| OS (A)- |

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 11.07.1987 அன்று காணாமல் போன திரு.நாகராஜன் இறந்துவிட்டதாக 29.10.2004 நீதிமன்றத்தால விளம்புகை செய்யப்பட்டுள்ளவரின் வாரிசுதாரான திரு.என்.சுரேஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்

பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். காணாமல் போன அரசு ஊழியர் இறந்து போனதாக நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்ட திரு.நாகராஜன், பிறந்த தேதி 10.07.1949, இவர் அரசு பணியில் 16.11.1977 முற்பகல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 15.11.1979 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 11.07.1987 அன்று காணாமல் போன திரு.நாகராஜன் இறந்துவிட்டதாக 29.10.2004 நீதிமன்றத்தால விளம்புகை செய்யப்பட்டுள்ளவரின் வாரிசுதாரான திரு.என்.சுரேஷ் (பிறந்த தேதி 02.04.1978) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/-நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தருமபுரி மாவட்டம், பென்னாகரம், அரசு தலைமை மருத்துவமனையில் 31.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.என்.சுரேஷ் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-9இல் காணும் அரசாணையின்படி, அவர் பணியில் இணைந்த நாளான 31.10.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ். குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்

பெறுநர்
திரு.என்.சுரேஷ்,
இளநிலை உதவியாளர்,
அரசு தலைமை மருத்துவமனை, பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.
-- இணை இயக்குநர் நலப்பணிகள், தருமபுரி மூலமாக.

நகல்
1) நலப்பணிகள் இணை இயக்குநர், தருமபுரி.
2) மருத்துவமனைக் கண்காணிப்பாளர், அரசு தலைமை மருத்துவமனை, பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.
3) நிர்வாகப்பிரிவு 2 (2 நகல்கள்)
4) நிர்வாகப்பிரிவு 2 (முதுநிலை)
5) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

ந.க. எண். 4865/ஏ1/2021,

இணை இயக்குநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
மற்றும் குடும்ப நலம், தருமபுரி,

நாள். 25.3.22

இளநிலை நிர்வாக அலுவலர்

- அனுப்பப்படுகிறது -

பெறுநர்,
தனியர் - உரிய வழியாக,
நகல்: மருத்துவ அலுவலர்,
பென்னாகரம்.

28/3/22

இணை இயக்குநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
மற்றும் குடும்ப நலம், தருமபுரி,

25/3/22